**கவனிக்க.-** *2010.08.13 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி III ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*
**கவனிக்க.-** *இவ்வர்த்தமானியின் பகுதி V இல் காலாண்டுக்கான (2007, யூலை-செத்தெம்பர்) புத்தகப் பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றது.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1668 - 2010 අගෝස්තු මස 20 වැනි සිකුරාදා - 2010.08.20
*1668 ஆம் இலக்கம் – 2010 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 1269 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | – |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2010, ஓகத்து மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, ஓகத்து மாதம் 13 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.*

***3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :***

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத்தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்;ராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்;ராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பதவிகள் - வெற்றிடம்

## 2009.09.16 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் போது மேற்கொண்டுள்ள அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைவாக முதுமுறை மற்றும் திறமையின் அடிப்படையில் 15 வருட சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்திருக்கும் கிராம அலுவலர்களை 2009.10.01 ஆந் திகதி தொடக்கம் கிராம அலுவலர் சேவையில் தரம் I இற்குப் பதவி உயர்த்துதல்

*கிராம அலுவலர் சேவையைச் சேர்ந்த பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள தரம் II இன் கிராம அலுவலர்களை, முதுமுறை மற்றும் திறமையின் அடிப்படையில் தரம் I இற்கு தரமுயர்த்துவதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

**பதவி உயர்விற்கான விதிகள்.**- *கீழே இலக்கம் 2 இல் குறிப்பிட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்திருக்கும் கிராம அலுவலர்கள் என்னால் நியமனம் செய்யப்படுவார்கள். நேர்முகப் பரீட்சை சபையால் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு அவர்களது திறமை மற்றும் முதுமுறை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு புள்ளிகள் வழங்கப்படும். அமைச்சரவைத் தீர்மானத்தின்படி தரமுயர்வுத் திட்டங்களின் திருத்தங்களின் பிரகாரம் நேர்முகப் பரீட்சையில் அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்திருக்கும் பரீட்சார்த்திகள் 2009.10.02 ஆந் திகதி தொடக்கம் தரம் I இற்கு தரமுயர்த்தப்படுவார்கள்.*

2. **தகைமைகள்.**- *(அ) மாகாண அரச சேவையில் உள்ளீர்க்கப்பட்டிருந்த காலப்பகுதியும் அடங்கலாக 2008.07.31 ஆந் திகதிக்கு கிராம அலுவலர் சேவையில் தரம் II இல் 15 வருட சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்திருக்க வேண்டும் (தரம் II இல் 15 வருட சேவைக்காலத்திற்கு சமுர்த்தி, கிராமத் தலைமைக்காரர், விசேட சேவை அலுவலர், பயிர்ச்செய்கை அலுவலர், விவசாய விஸ்தரிப்பு அலுவலர் ஆகிய சேவையொன்றில் இருந்து கிராம அலுவலர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட்டவர் எனில், முன்னரான சேவையின் நிரந்தர சேவைக்காலமும் உள்ளடக்கப்படும். அவ்வாறே அரசியல் காரணங்களால் 1977 ஆம் ஆண்டில் தொழிலற்று அவி/97/0419/05/016 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத் தீர்மானத்தின்படி 1995 ஆம் ஆண்டில் மீள சேவையில் அமர்த்திய அலுவலரின் சேவைக்காலம் கணக்கிடும்போது 1977 ஆம் ஆண்டில் முதல் நியமனம் பெற்ற திகதியிலிருந்து சேவைக்காலம் கணக்கிடப்படும்).*

*(ஆ) 2009.10.01 ஆந் திகதிக்கு முன்னர் கிராம அலுவலர் தரம் II இன் இறுதி 5 ஆண்டுகளில் திருப்தியான சேவைக்காலமும் சகல சம்பள ஏற்றங்களையும் உழைத்துப் பெற்றிருத்தல் வேண்டும்.*

*(இ) 2009.10.01 ஆந் திகதிக்கு முன்பு கிராம அலுவலர் சேவையில் அங்கீகரிக்கப்பட்ட செயற்றிட்டத்திற்கு ஏற்ப வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.*

**குறிப்பு.**- *தரம் II இன் கிராம அலுவலர்களினது வினைத்திறமை காண் தடைப்பரீட்சையை கடந்து செல்லல், சம்பள அளவுத்திட்டம் பற்றி கவனத்திற்கொள்ளாது 10 வருட சேவைக்காலத்தை பூர்த்திசெய்த தரம் II இன் கிராம அலுவலர்களினது திருப்திகரமான வேலை, நடத்தை, வருகை ஆகிய விடயங்கள் தொடர்பாக அவர்கள் சேவையாற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளரால் வழங்கப்படும் சான்றிதழின் பேரில் தங்கியிருக்கும்.*

3. (i) **சம்பள முறை.**- *கிராம அலுவலர் சேவையின் தரம் I இற்காக- மாதம்.- 16,680-09x240-10x320-22,040 (அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 6/2006 (iv) இன்படி)*

*(ii) அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 6/2006 (iii), (iv) இன் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்களுக்கு அமையவும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கு அமையவும் தரமுயர்த்தப்படும் அலுவலர்களை மேற்படி சம்பள அளவுத்திட்டத்தில் உரிய சம்பள படிநிலையில் அமர்த்தப்படும்.*

4. **தரமுயர்த்தும் முறை.**- *பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சை சபையின் மூலம் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். அதன்போது நேர்முகப் பரீட்சை சபையினால் பத்தி 02 இன் தகைமைகளைப் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதா என்றும்,*

*(அ) சிறந்த சேவை அறிக்கைகளுக்கு 20 புள்ளிகள் :*
*உரிய திகதிக்கு 05 ஆண்டுகளுக்கு முன்னர் திருப்திகரமான சேவைக்காலத்தைத் தவிர அதற்கு முன்னர் திருப்திகரமான சேவைக்காலத்திற்காக ஆண்டொன்றுக்கு 02 புள்ளிகள் வீதம் உரித்தாகும்.*

*(ஆ) நற்பெயர் பாராட்டுக்கள் தொடர்பாக 20 புள்ளிகள் :*
*அனுமதிக்கப்பட்ட படிவத்தின் மூலமாக வழங்கப்பட்டுள்ள பாராட்டுச் சான்றிதழ்களுக்காக 04 புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு பாராட்டுச் சான்றிதழுக்கும் 02 புள்ளிகள் வீதமும் உரித்தாகும்.*

*(இ) ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்காக 10 புள்ளிகள்*

*(ஈ) பணிமூப்பிற்காக 30 புள்ளிகள் :*
*பணிமூப்பிற்காக 15 ஆண்டுகளுக்கு அதிகமான ஒவ்வொரு திருப்திகரமான சேவைக்காலத்திற்கும் ஒரு ஆண்டுக்கு 02 புள்ளிகள் வீதம் உரித்தாகும்.*

*(உ) சேவை அனுபவம், ஒப்படைக்கப்பட்ட கடமைப் பொறுப்புக்கள் என்பவற்றிற்காக 20 புள்ளிகள் என்ற வகையில் புள்ளிகள் வழங்கப்படும்.*

*(ஊ) அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளதாக நேர்முகப் பரீட்சை சபையினால் பரிந்துரை செய்கின்றவிடத்து 2009.10.01 ஆந் திகதி தொடக்கம் தரமுயர்வு வழங்கப்படும். 2009.10.01 ஆந் திகதியில் அலுவலர் சேவையில் இல்லாதவிடத்து அப்பதவி உயர்விற்கான உரித்துக்களைப் பெறமாட்டார்.*

5. **விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுதல்.**- (i) *விண்ணப்பப் பத்திரத்தின் இரண்டு பிரதிகள் சகிதம் பூர்த்திசெய்து ஒரு பிரதியை பிரதேச செயலாளர் ஊடாக உரிய மாவட்டச் செயலாளருக்கு பதிவுத்தபாலில் 2010.09.20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைப்பதற்கும் மற்றைய பிரதியை சுயவிபரக் கோவையில் உள்ளடக்குவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.*

(ii) *மாவட்டச் செயலாளரால் உரிய திகதியில் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் தொடர்பான அட்டவணையை பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் தயாரித்து இரு வாரங்களுக்குள் அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும் (விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய அவசியமில்லை).*

(iii) *மாதிரி விண்ணப்பப்படிவங்களுக்கு அமைய விண்ணப்ப தாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை தயாரித்துக்கொள்ளுதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை தட்டச்சில் இட்டு தயாரித்துக்*

கொள்ள முடியுமாயினும் விண்ணப்பதாரிகள் சொந்தக் கையெழுத்தில் சரியாகவும் தெளிவாகவும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(iv) விண்ணப்பப்படிவத்திற்கு எந்தவொரு கடிதமோ அல்லது கடிதத்தின் பிரதியினையோ இணைத்து அனுப்பிவைத்தலாகாது. ஆயினும் தாம் குறிப்பிடும் தகைமைகளை உறுதிப்படுத்தும் கடித, ஆவணங்களை கோருமிடத்து அவற்றை சமர்ப்பிப்பதற்காக தயாராக வைத்திருத்தல் வேண்டும்.

(v) இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கிடைக்கப்பெறாத மற்றும் முற்பெறாத சகல விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும்.

டீ. திசாநாயக்க,
செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7.
2010.07.29.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**திறமை அடிப்படையில் கிராம அலுவலர்களை தரம் I இற்கு பதவி உயர்த்துவதற்கான விண்ணப்பப்படிவம்**

(ஏ4 அளவினைக் கொண்ட தாளின் இரண்டு பக்கங்களிலும் தயாரிக்கவும்.)

பகுதி I

1. (i) முதல் எழுத்துக்களுடன் பெயர் :----.
 (ii) முதலெழுத்துக்களில் குறிப்பிடும் பெயர்கள் :----.
2. (i) அலுவலக முகவரி :----.
 (ii) சொந்த முகவரி :----.
3. தேசிய அடையாள அட்டையின் இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

4. பிறந்த திகதி :

ஆண்டு : [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

5. 2009.10.01 ஆந் திகதியில் கிராம அலுவலர் சேவையின் சேவைக்காலம் :

வருடங்கள் : [ | ] மாதங்கள் : [ | ] நாட்கள் : [ | ]

6. அரசாங்க சேவையில் முதல் நியமனத் திகதி :----.
7. கிராம அலுவலர் சேவைக்கு நியமனம் பெற்ற திகதி/உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட திகதி :----.
8. கிராம அலுவலர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட்ட அலுவலராக இருந்தால் அதுபற்றிய விபரங்கள் (சம்பந்தப்பட்ட பகுதியை மட்டும் பூர்த்தி செய்க) :----.

| உட்சேர்ந்திருந்த சேவை | உட்சேர்ந்த திகதி | சேவைக்காலம் |
|---|---|---|
| (அ) விசேட சேவை அலுவலர் சேவை | ........................ | ........................ |
| (ஆ) பயிர்ச்செய்கை அலுவலர் சேவை | ........................ | ........................ |
| (இ) விவசாய விஸ் தரிப்புச் சேவை | ........................ | ........................ |
| (ஈ) சமுர்த்தி அல்லது கிராமத் தலைமைக் காரர் சேவை | ........................ | ........................ |
| (உ) ஏனையவை | ........................ | ........................ |

9. (i) தற்போது சேவையாற்றும் கிராம அலுவலர் பிரிவின் பெயரும் இலக்கமும் :----.
 (ii) அப்பிரிவு உரித்தாகும் பிரதேச செயலகப் பிரிவு :----.
 (iii) அப்பிரிவு உரித்தாகும் மாவட்டம் :----.

10. சேவையாற்றிய மாவட்டங்கள், பிரதேச செயலகப் பிரிவுகள் (திகதிகளும் காலகட்டங்களும்) :----.

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | கால எல்லை | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

11. (i) சேவைக்காலத்தில் அனைத்து சம்பள ஏற்றங்களையும் உழைத்துப் பெற்றுள்ளீர்களா ? :----.
 (ii) இல்லாவிடின் விபரங்களைத் தருக :----.

12. கூட்டுத்தாபனமொன்றிற்கு அல்லது வேறு ஏதேனுமொரு சேவைக்கு நீங்கள் விடுவித்திருப்பின் அல்லது தற்போது விடுவிக்கப்பட்டிருப்பின் அது தொடர்பான விபரங்களைக் குறிப்பிடவும் :----.

13. நீங்கள் வெளிநாட்டுத் தொழில் அல்லது வேறு விடயம் பொருட்டு சம்பளமற்ற விடுமுறைகளைப் பெற்றிருந்தால் அது தொடர்பான விபரங்களைக் குறிப்பிடவும் :----.

14. சேவைக்காலத்தினுள் செயற்படுத்திய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் (செய்யப்பட்ட வேலைகள், பிரதேசத்தில் நன்மைகள் பெற்ற மக்கள் ஆகிய விபரங்களைச் சுருக்கமாகத் தருக.) :----.

15. சேவைக்காலத்தினுள் பெற்றுள்ள பாராட்டுக்கள் தொடர்பான விபரங்கள் :----.

16. தங்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா ? அது தொடர்பான விபரங்களைத் தரவும் :----.

........................ ஆகிய நான் மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் இத்தால் உறுதியுரைக்கிறேன். மேலும் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் பொய்யானவை எனக் கண்டுபிடிக்கப்பட்டால் இச்சேவையின் தரம் I இற்கு தரம் உயர்த்துதல் தொடர்பாக எனது உரிமைகளைக் கவனிக்காது விடுவதற்கும், எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் முடியுமென்பதையும் நான் நன்கு அறிவேன். அவ்வாறு நடவடிக்கை எடுப்பதை நான் ஆட்சேபிக்க மாட்டேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

பகுதி II

பிரதேச செயலாளரினால் பூர்த்திசெய்யப்பட வேண்டும்.

மாவட்டச் செயலாளர்,
மாவட்டச் செயலகம்.
................................

(i) திரு./திருமதி/செல்வி ....................................... ஆல் மேலே குறிப்பிட்டுள்ள தகவல்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் அவரின் பெயர்வழிக் கோவையுடன் சரிபார்க்கப்பட்டு அவை சரியானவை என்றும்,

(ii) அவருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தப்பட வில்லையென்றும்/ஒழுக்காற்று நடவடிக்கை எதுவும் எடுக்கும் உத்தேசம் இல்லையென்றும்,

(iii) உடன் முன்னரான 5 ஆண்டுக் காலத்திற்குள் அவரின் சேவை திருப்திகரமாக இருந்ததென்றும் ........................... ஆந் திகதி தொடக்கம் கிராம அலுவலர் தரம் II இற்கு நியமிக்கப் பட்டுள்ளார் என்றும் ................................. ஆந் திகதி தொடக்கம் வினைத்திறன்காண் தடைக்கு மேல் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்/விலக்களிக்கப்பட்டுள்ளார் என்றும் இத்துடன் சமர்ப்பித்துள்ள விண்ணப்பத்தின் பிரதி அலுவலரின் பெயர்வழிக் கோவையில் இணைக்கப் பட்டுள்ளது என்றும் சான்றுப்படுத்துகிறேன்.

----,
பிரதேச செயலாளர்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
உத்தியோகபூர்வ முத்திரை :----.
திகதி :----.

8-385

---

திருத்தம்

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி - காலி மாவட்டம்

2010.04.23 ஆந் திகதிய 1651 ஆம் இலக்க வர்த்தமானியில் என்னால் அறிவித்தலில் உள்ளடக்கப்பட்ட காலி மாவட்டத்தில் ஹிக்கடுவ பிரதேச செயலாளர் பிரிவில் வெல்லாபொடபத்துவ (டோடண்துவ) பிரதேசத்தில் மேலதிக விவாகம் (பொது) பதிவாளர் பதவிக்கான விண்ணப்பங்களில் "காலி மாவட்டத்தில் ஹிக்கடுவ பிரதேச செயலாளர் பிரிவில் வெல்லாபெடபத்துவ" என மாத்திரம் திருத்தப்படுகின்றதென பணிவுடன் தெரிவிக்கின்றேன்.

2. இந்த விண்ணப்பத்தில் கோரும் அறிவித்தலில் குறிப்பிட்ட ஏனைய விடயங்கள் யாவும் அவ்வாறே நடைமுறையாகும் எனவும் தெரிவிக்கின்றேன்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

8-402